RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 155 | ஜூன்.12 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# குழந்தைத் தொழிலாளர் முறையைத் தகர்ப்போம்! : முதல்வர் விஜய் சூளுரை

சென்னை: ஜூன்.12-

குழந்தைத் தொழிலாளர் முறையைத் தகர்ப்போம். கல்வி அளித்து குழந்தைகளின் வாழ்வை ஒளிரச் செய்வோம் என்று முதல்வர் விஜய் சூளுரைத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக உலகெங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஜூன் 12ம் நாள் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

துள்ளித் திரிந்து விளையாடி, பள்ளிக்குச் சென்று கல்வி பயிலும் இனிய பருவமே குழந்தைப் பருவமாகும். இப்பருவத்தில், பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் வேலைக்குச் செல்கின்ற குழந்தைகளை, அக்கொடுமையில் இருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் வழங்கிட வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.



ஒவ்வொரு குழந்தைக்கும், சுதந்திரமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை போன்றவை அவசியமானதாகும். இவற்றை வழங்க மறுப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும். குழந்தைகளின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எதிராக எவ்வகையான தொழில்களிலும் குழந்தைகளைப் பணியமர்த்தக் கூடாது மற்றும் வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் பணியமர்த்தக் கூடாது.

குழந்தைகளைத் தொழிற்பணிகளில் ஈடுபடுத்தாமல் அவர்களுக்கான உரிமைகளைப் பேணிக்காத்து, முறையான கல்வி அளித்து, மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தை அவர்கள் பெறுவதை உறுதி செய்வதுடன் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதையே தமிழக அரசு தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதனடிப்படையில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்திட தமிழக அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் உழைப்பின் மூலம் பெறப்படும் வருமானம் வீட்டிற்கும், நாட்டிற்கும் சிறுமை என்பதை சமூகமும், பெற்றோர்களும் உணர்ந்து, குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழித்திட தமிழக அரசு செயல்படுத்தும் முன்னெடுப்புகளுக்குத் துணை நின்று, குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடுவோம். குழந்தைத் தொழிலாளர் முறையைத் தகர்ப்போம்! கல்வி அளித்து குழந்தைகளின் வாழ்வை ஒளிரச் செய்வோம்!'' என்று முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

## திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் இல்லை: மு.வீரபாண்டியன்

கோவை: ஜூன்.12-

"தமிழக அரசியலில் குழப்பமான சூழல் நிலவுகிறது. உள்ளாட்சி, மக்களவைத் தேர்தலின் போது விவாதித்து யாருடன் கூட்டணி என முடிவெடுப்போம். திமுக கூட்டணியில் இப்போதுள்ள சூழலில் இடம்பெற இயலாது'' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.



கோவையில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய மு.வீரபாண்டியன், "வரும் 18ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் சட்டப்பேரவை நிகழ்வுகள் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்க வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், தமிழக சட்டப்பேரவையின் இறையாண்மைக்கும் முந்தைய ஆளுநர் செவிமடுக்கவில்லை. தற்போதைய ஆளுநரும் அதே பாதையில் செயல்படக் கூடாது.

கொடுத்த வாக்குறுதியின்படி விவசாயக் கடன்களை தமிழக முதல்வர் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். இதற்கு ஒன்றிய அரசு நிதி வழங்க வேண்டும். ஏற்கெனவே கிடப்பில் உள்ள நிதியையும், முதல்வர் விஜய் கேட்கின்ற நிதியையும் ஒன்றிய அரசு அளிக்க வேண்டும். இருமொழி கொள்கையில் கடந்த ஆட்சியாளர்கள் உறுதியாக இருந்தது போல, தமிழக முதல்வர் விஜய்யும் உறுதியாக இருக்க வேண்டும். சிறு, குறு தொழில்களை தமிழக அரசு பாதுகாக்க வேண்டும்.

5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக் குழு கூடி ஆலோசித்து அப்போதைய சூழலுக்கேற்ப, யாருடன் அணி சேருவது என முடிவெடுப்போம். தற்போது திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் விலகிவிட்டது. திமுகவும் இண்டியா கூட்டணியில் இடம்பெற மாட்டோம் என அறிவித்துவிட்டது. வேறு சில கட்சிகளும் தவெக அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறது.

திமுக, அதிமுக, தவெக ஜனநாயக சக்திகள். நாட்டு நலன் கருதி, அவர்களுடன் இணைந்து எங்களால் பணியாற்ற முடியும். எங்களுக்கு ஒரே ஒரு பகை முரண் ஆர்எஸ்எஸ், பாஜகதான். மற்றபடி தமிழகத்தில் எந்த அரசியல் கட்சியுடனும் எங்களுக்கு பகை முரண் இல்லை.

இடதுசாரி அமைப்புகளில் முக்கிய முடிவுகளை எடுக்க பல்வேறு குழுக்கள் உள்ளது. எனவே தவெக அரசுக்கு ஆதரவளிக்க நாங்கள் தான் கூறினோம் என முன்னாள் முதல்வர் ஸ்டாலின் பேசியிருக்கக் கூடாது, அது தவறு. திமுகவுடன் இப்போது ஒரு கூட்டணி சூழல் இல்லை. தவெக அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கிறோம்.

தமிழக அரசியலில் குழப்பமான சூழல் நிலவுகிறது. உள்ளாட்சி, மக்களவைத் தேர்தலின் போது விவாதித்து யாருடன் கூட்டணி என முடிவெடுப்போம். எப்போதும் நாங்கள் ஜனநாயக சக்திகளுடன் கைகோப்போம். திமுக, அதிமுக, தவெகவை ஜனநாயக சக்தியாகவே எப்போதும் பார்க்கிறோம். திமுக கூட்டணியில் இப்போதுள்ள சூழலில் இடபெற இயலாது.

உழைக்கும் மக்கள் இருக்கும் வரை இடதுசாரிகளை யாரும் அழிக்க முடியாது. சட்டப்பேரவை, நாடாளுமன்றத்தில் எங்கள் குரல் ஒலிக்காவிட்டாலும், தெருக்களில் எங்கள் குரல் ஒலிக்கும். முதல்வர் விஜய் பத்திரிகை, ஊடகங்களை சந்தித்து கருத்துக்களை பேச வேண்டும், அதுவே ஜனநாயகம். தமிழகத்தில் எந்த தொலைக்காட்சியையும் இருட்டடிப்பு செய்து முடக்கக் கூடாது. யூடியூபர்கள் யாரையும் கைது செய்யக் கூடாது. யாரேனும் வரம்பை மீறினால் சட்ட நடவடிக்கை மட்டுமே எடுக்கலாம்'' என்று கூறினார்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நவீன அரிசி ஆலை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.சிவகுரு பிரபாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## 'சிங்கப்பெண்' பிரிவு எதற்கு? ஸ்ரீவைகுண்டம் சம்பவத்தை சுட்டிக்காட்டி உதயநிதி கேள்வி

சென்னை: ஜூன்.12-

ரீல்ஸ் எடுத்து போஸ்ட் செய்யத்தான் 'சிங்கப்பெண்' பிரிவை முதல்வர் உருவாக்கினாரா? இந்த கேள்விகளுக்கு முதல்வர் என்ன பதில் வைத்திருக்கிறார்? ஸ்ரீவைகுண்டத்தில் பாதிக்கப்பட்டப் பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உண்மையிலேயே பெண்கள் பாதுகாப்பில் முதல்வருக்கு அக்கறை இருக்கிறதா?'' என்று தமிழ்நாட்டுப் பெண்களை எல்லாம் கொதிப்படைய வைத்துள்ளது ஸ்ரீவைகுண்டத்தில் முதல்வர் விஜயின் ரசிகை ஒருவருக்கு நடந்துள்ள அநீதி. அந்தப் பெண்ணை ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ சரவணனுக்கு நெருக்கமான அக்கட்சி நிர்வாகிகள் இருவர், வேலை வாங்கித்தருவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.



அமைச்சர் புஸ்ஸி ஆனந்திடம் பேசி உனக்கு வேலை வாங்கித் தருகிறேன் என்று எம்எல்ஏ சரவணன் சமரசம் பேச முயன்றதாக பாதிக்கப்பட்டப் பெண் கூறியுள்ளார். இதேபோல், இன்னொரு பெண்ணும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பெண் கூறுகிறார். இன்னொரு அமைச்சருக்கும் இந்தப் பிரச்சினை தெரியும் என்கிறார். எல்லாம் மேலிடத்துக்கு தெரியும் என்று குற்றவாளிகள் கூறியதாகவும் சொல்லி உள்ளார்.

ஆளுங்கட்சியில் "யார் அந்த மேலிடம்'' என்று மக்கள் கேட்கின்றனர். 'தனிமனித ஒழுக்கம்' பற்றி பாடமெடுத்துள்ள முதல்வரின் ஒட்டுமொத்த #Sofa-Model அரசும், இந்த விவகாரத்தை மூடிமறைக்க முயன்றுள்ளது. குற்றத்தை செய்தவர்களை பாதுகாக்க முயன்றதோடு மட்டும் இல்லாமல், பாதிக்கப்பட்ட பெண்ணை கட்சியில் இருந்தும் நீக்கி இருக்கிறார்கள். பாலியல் வன்கொடுமை செய்திகளை கேட்கும் போதெல்லாம் நெஞ்சம் கலங்குகிறது,பதறுகிறது என்று 2 நாட்கள் முன்பு முதல்வர் பேசினார்.

ஆனால், தன் கட்சியைச் சேர்ந்த தவெக ஆட்களே பாலியல் வன்கொடுமை செய்தால், பாதிக்கப்பட்ட பெண் மீது நடவடிக்கை எடுக்கிறார். ரீல்ஸ் எடுத்து போஸ்ட் செய்யத்தான் 'சிங்கப்பெண்' பிரிவை முதல்வர் உருவாக்கினாரா?

இந்தக் கேள்விகளுக்கு முதல்வர் என்ன பதில் வைத்திருக்கிறார்? ஸ்ரீவைகுண்டத்தில் பாதிக்கப்பட்டப் பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட எம்எல்ஏ சரவணன் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். அவருக்கு ஆதரவாக இருந்த ஆளுங்கட்சி மேலிட புள்ளிகள் யாரென்று விசாரித்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "தவெக அரசை ஆதரிக்க இந்த இரண்டு காரணங்கள் போதும்!" : ப.சிதம்பரம் பட்டியல்

சென்னை: ஜூன்.12-

"மதச்சார்பின்மையை ஏற்றுக் கொள்கிறோம், மாநில உரிமையை பாதுகாப்போம்'' என தவெக சொல்கிறது. இந்த இரண்டு காரணங்கள் தமிழக அரசை ஆதரிக்க போதுமே. மதச்சார்பின்மை, மாநில உரிமைகள் என்ற அடிப்படையான கொள்கைகளிலிருந்து விலகாத வரை அவர்களை ஆதரிப்பதில் எந்தத் தவறும் இல்லை'' என காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "தவெக ஆட்சிக்கு ஆதரவு தருவதாக காங்கிரஸ் தலைமை அறிவித்தது. இதனையடுத்து, கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக மற்றும் ஐயூஎம்எல் ஆகிய கட்சிகள் தங்களின் ஆதரவை கொடுத்திருக்கிறார்கள். தற்போதைய அரசாங்கம் நிலையான அரசாக நல்லாட்சியை தர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இந்த தேர்தலில் நானோ, காங்கிரஸ் கட்சியோ, ஊடகங்களோ, கருத்துக்கணிப்போ என யாரும் எதிர்பார்க்காத வகையில் தமிழக வெற்றி கழகம் ஏறத்தாழ 35 சதவீதம் வாக்குகளை பெற்றுள்ளது. மகத்தான வாக்கு பதிவை வாங்கி ஆட்சியை அமைத்திருக்கிறது தவெக.

கட்சி ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளிலேயே இவ்வளவு பெரிய வெற்றியை அடைந்ததற்கு எனது பாராட்டுக்கள். தவெகவுக்கு இளைஞர்கள், இளம்பெண்கள் பெருவாரியாக வாக்களித்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலேயும் ஒரு ஓட்டாவது இருந்திருக்கிறது. அனைத்து பிரிவுகளிலும் வாக்களித்திருக்கிறார்கள். குறிப்பாக எனது பார்வையில், நகர்ப்புற பகுதிகளில் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறார்கள். அதாவது, சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பெரிய வெற்றியை பெற்றிருக்கிறார்கள்.

இந்த அரசு, இளைஞர்களின் நம்பிக்கையை காப்பாற்றி அவர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டங்கள், கல்வித் திட்டங்கள், தொழில் செய்வதற்கான திட்டங்களை அரசு வரையறுத்து, நிறைவேற்ற வேண்டும் என்பது எனது கோரிக்கை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் மு.வீரபாண்டியனை சந்தித்தேன்; கூட்டணி விவகாரத்தில் அவர் பொதுக்குழுவில் முடிவெடுக்கப்படும் என சொல்லியிருந்தார். அவ்வாறு அவர்கள் எடுத்த முடிவை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தேர்தலுக்குப் பிறகு நான் டெல்லி சென்றுவிட்டேன்; பின்னர், அண்மையில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். அவருக்கு நன்றி தெரிவித்தேன். கருத்து பரிமாறிக் கொண்டோம். அவர் இண்டியா கூட்டணியில் இருந்து விலகுவதாக எனக்கு சொல்லவில்லை. இந்தக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது தெரியும். மேகேதாட்டு விவகாரத்தில் திமுக, அதிமுக எடுத்த முடிவை காங்கிரஸ் ஆதரித்தது. அதேபோல தற்போதைய அரசின் முடிவையும் காங்கிரஸ் ஆதரிக்கும்.

அண்ணாமலை பாஜகவில் இருந்து விலகி ஓர் இயக்கத்தை தொடங்கி இருக்கிறார். அது ஓர் அரசியல் கட்சியாக மாறுமா, மாறாதா என்பது எனக்கு தெரியவில்லை. பாஜகவில் அவரை சரியாக மதிக்கவில்லை, பயன்படுத்தவில்லை என்று தான் அவர் பேட்டியில் இருந்து நான் உணர்கிறேன். பாஜக எங்களுக்கு கொள்கை எதிரி என்று சொல்லியிருக்கிறது தவெக. மதச்சார்பின்மையை ஏற்றுக் கொள்கிறோம், மாநில உரிமையை பாதுகாப்போம் எனச் சொல்கிறார்கள். இந்த இரண்டு காரணங்கள் தமிழக அரசை ஆதரிக்க போதுமே. மதச்சார்பின்மை, மாநில உரிமைகள் என்ற அடிப்படையான கொள்கைகளிலிருந்து விலகாத வரை அவர்களை ஆதரிப்பதில் எந்த தவறும் இல்லை.

கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களிடம் பேசியபோது, அவர்களும் இதைத்தான் சொல்கிறார்கள். தமிழக மக்கள் மறுதேர்தலை விரும்பவில்லை என்பதுதான் என்னுடைய கணிப்பு. பின்னர், குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற பெயரில் பாஜக பின் வாசலில் வந்து அரியணையில் அமர்ந்துவிடும். எங்களின் நிலைப்பாடு பொதுவான நிலைப்பாடு.

திமுக அதிமுக கூட்டணி அமைக்க முயற்சி செய்ததாக கூறப்படுவது குறித்து எனக்கு தெரியாது. தெரியாத விசியத்தைப் பற்றி எப்படி கருத்து சொல்வது; இது எனது அறியாமையாக இருக்கலாம், அதேவேளையில் இது உங்களின் அறிவுக் கூர்மையாக இருக்கலாம்.

தவெக தற்போது தான் ஆட்சிக்கு வந்திருக்கிறது. 31 அமைச்சர்கள் சட்டப்பேரவைக்கு அனுபவம் இல்லாதவர்கள். 101 சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்முறையாக சட்டமன்றத்துக்குள் வந்துள்ளார்கள். அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். சட்டப்பேரவையில் வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகள்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






■ நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆணைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் வழிகாட்டுதல்படி 10.06.2026 அன்று குன்னூர் உட்கோட்டம் கொலக்கம்பை காவல் நிலைய எல்லைக்ககுட்பட்டநெடிமந்து பழங்குடியின.ய்கிராமத்தில்விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.இக் கூட்டத்தில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், Cyber crime,தீண்டாமை ST மக்களுக்கான அரசின் வேலை வாய்ப்பு திட்டங்கள் குறித்து எடுத்து கூறப்பட்டது.மேலும் SC/ST மக்களுக்கான அரசின் நல திட்டங்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கான அரசின் கல்வி சலுகைகள் பற்றிய நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டது

# பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் என்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி பங்கேற்பு






தாம்பரம், ஜூன்.12-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வருவாய் கோட்டம் பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகம் சார்பில் வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சியான ஜமாபந்தி இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய ரேஷன் கார்டு மகளிர் உதவித்தொகை முதியோர் உதவித்தொகை பட்டா உள்ளிட்டவைகள் வழங்க கோரிக்கை போன்ற 500க்கும் மேற்பட்ட மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார் நிகழ்ச்சியில் தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் முரளி, வட்டாட்சியர் செந்தில் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து தாம்பரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சியில் வருவாய் தீர்வாய அலுவலர் பொதுமக்களிடம் 500 க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்று உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட்டார்தாம்பரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் என்ற ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வருவாய் தீர்வாயம், மாவட்ட வழங்கல் நூகர்வோர் பாதுகாப்பு அலுவலர் வெங்கடாச்சலம் தலைமையில் வட்டாச்சியர் நடராசன் முன்னிலையில் முதியோர் உதவி தொகை, பட்டா, ரேஷன் கார்டு, மகளிர் உதவி தொகை உள்ளிட்டவைகள் வழங்க கோரி பொதுமக்களிடம் இருந்து500 க்கும் மேற்பட்ட மனுக்களை பெற்று அதற்கு உடனடி தீர்வு காணுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதில் அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# திருப்பத்தூரில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடக்க விழா

திருப்பத்தூர், ஜூன் .12-
தமிழ்நாடு அரசின் பெண்கள் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள "சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" (Singappen Special Task Force) திருப்பத்தூர் மாவட்டத்தில் 10/06/2026 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே,இ.கா.ப. சிறப்பு அதிரடிப்படையை கொடியசைத்து தொடங்கி வைத்து, அதன் பணிகள் மற்றும் நோக்கங்கள் குறித்து விளக்கமளித்தார். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அவசரகாலங்களில் உடனடி உதவி வழங்கவும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்த சிறப்பு அதிரடிப்படை செயல்படும். மேலும், பொதுமக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி, பெண்கள் அச்சமின்றி வாழும் சூழலை உருவாக்கும் பணியிலும் ஈடுபடும். இந்நிகழ்வில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.



# குரிசிலாப்பட்டு மற்றும் ஆலங்காயம் காவல் நிலையங்களை காவல் கண்காணிப்பாளர் நேரில் திடீர் ஆய்வு

திருப்பத்தூர், ஜூன் .12-
திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., அவர்கள் (10.06.2026) அன்று குரிசிலாப்பட்டு மற்றும் ஆலங்காயம் காவல் நிலையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது காவல் நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், வழக்கு ஆவணங்கள் மற்றும் நிர்வாக செயல்பாடுகளை பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிப்பது குறித்து காவல் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். மேலும், காவல்துறையினர் பொதுமக்களிடம் மரியாதையுடனும், கனிவுடனும் அணுகி அவர்களின் குறைகளை உடனுக்குடன் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். இவ்வாய்வின் போது காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருடன் கலந்துரையாடி, காவல் பணிகளை மேலும் திறம்பட மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.





■ நீலகிரி மாவட்டம் உதகைக்கு கடந்த வாரம் வருகை தந்த பாராளுமன்ற நிலைக்குழு தலைவர் தமிழ்நாடு காவல்துறையின், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் மிநி சாமுண்டஸ்வரி IPS சந்தித்தார்கள் .மேலும் அன்றையதினத்தில்பழங்குடியினருக்கான NGO வை சேர்ந்த மணிகண்டன் ஒருங்கிணைக்கப்பட்டு உதகை படப்பிடிப்பு பகுதியில் உள்ள பழங்குடியினர் முன்னேற்ற கூட்டுறவு சங்க அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தோடர், குறும்பர், கோத்தர், காட்டுநாயக்கர், உள்ளிட்ட பழங்குடியினரிடம் கலந்துரையாடி அவர்களின் நலன்சார்ந்த குறைகளை கேட்டரிந்தார்.






# கூடுவாஞ்சேரி ஜமாபந்தியில் நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கலெக்டர் வீரப்பன் எம்எல்ஏ தியாகராஜன் பங்கேற்பு

கூடுவாஞ்சேரி, ஜூன் .12-
செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் தாலுகாவில் உள்ள வண்டலூர் கூடுவாஞ்சேரி மாம்பாக்கம் ஆகிய குரு வட்டங்களுக்கான ஜமாபந்தி செவ்வாய்க்கிழமை அன்று தொடங்கப்பட்டது இதில் வண்டலூர் பீர்காவில் அடங்கிய வருவாய் கிராம மக்களுக்கு கூடுவாஞ்சேரியில் உள்ள வண்டலூர் தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி நடைபெற்றது வண்டலூர் தாசில்தார் ராஜா தலைமை தாங்கினார் துணை தாசில்தார் சுகுமார் வருவாய் ஆய்வாளர் லலிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர் சிறப்பு விருந்தினராக செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் வீரப்பன் செங்கல்பட்டு சட்டமன்றத் உறுப்பினர் தியாகராஜன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களிடம் 198 வண்டுகளை வாங்கினர் அனைத்து மனுக்களையும் வாங்கிய கலெக்டர் அதனை பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் இதில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் எம்.டி.லோகநாதன், மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுமதி லோகநாதன் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற கருத்துக்களம் அமைப்பு சார்பில் ஜென்சி இளைஞர்களுக்கான அரசியல் படுத்துவோம் என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கருத்துக்களம் அமைப்பின் தலைவர் ஆதிமாறன் தலைமையில் நடைபெற்றது மேலும் விக்கி என்கின்ற விக்னேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார், இந்த நிகழ்ச்சியில் கருத்துரை வழங்க ஊடகவியலாளர் இந்திரகுமார்தேரடி மற்றும் இளம் பேச்சாளர் வெற்றிச்செல்வன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பாபு மகப்பேறு மருத்துவமனை நிறுவனர் மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




■ கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்வேறு சிகிச்சை பிரிவுகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு, நோயாளிகளுக்கு தரமான சிகிச்சைகள் வழங்க மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்திறனார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா யாதவ், வட்டார மருத்துவ அலுவலர் சச்சரிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.




■ திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில், 2 வது நாளாக நடைபெற்ற 1435 ஆம் பசலி (2025 2026) ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயத்தில் (ஜமாபந்தி), வருவாய்த் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., அவர்கள் (09.06.2026) அன்று கலந்துக்கொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரடியாக பெற்றுக்கொண்டார். உடன் வட்டாட்சியர் சுதாகர், வட்டாட்சியர் (ச.பா.தி) பாரதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# சென்னையில் ரூ.20 கோடி மோசடி: ஒருவர் கைது, பெண் ஆய்வாளரிடம் விசாரணை

சென்னை, ஜூன்.12-
ராயபுரம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஷீலாமேரி. இவர், குறைந்த விலையில் தங்கக் காசு வழங்கும் முதலீட்டு திட்டத்தை தனது தூரத்து உறவினர் பிரபு மணி மூலமாக நடத்தி வந்துள்ளார்.கடந்த 2023 24ம் ஆண்டு வரை 200க்கும் மேற்பட்டோர் முதலீடு செய்த நிலையில், 2024 இறுதியில் பிரபு மணி திடீரென தனது நிறுவனத்தை மூடிவிட்டார்.தங்க காசு வியாபாரம் செய்யும் நபர் தன்னை ஏமாற்றி விட்டதாக கூறிய அவர், சொத்துகளை விற்று, பணத்தை தருவதாக முதலீட்டார்களிடம் கூறி வந்துள்ளார்.ஆனால், ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் பணத்தை திருப்பித் தரவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் சென்னை அசோக் நகர் பொருளாதார குற்றப்பிரிவு போலீஸாரிடம் புகார் அளித்தனர்.இந்த வழக்கில் பிரபு மணி நேற்று கைது செய்யப்பட்டார். ``ரூ.20 கோடி மோசடி நடந்துள்ளது. பெண் காவல் ஆய்வாளர் ஷீலா மேரியிடமும் விசாரணை நடத்தியுள்ளோம்'' என்று போலீஸார் தெரிவித்தனர்.

# தாராபுரத்தில் ஆர்யா கிளினிக் பல் மற்றும் இம்பிளாண்ட் மையம் திறப்புவிழா



தாராபுரம், ஜூன்.12-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பயர் சர்வீஸ் கார்னர் பெரியார் சிலை அருகே அமைந்துள்ள ஆர்யா கிளினிக் பல் மற்றும் இம்பிளாண்ட் மையத்தின் திறப்பு விழா இன்று காலை நடைபெற்றது.புதிய மருத்துவ மையத்தை மருத்துவர் டாக்டர் பி. சதீஷ்குமார் (எம்.பி.பி.எஸ்., எம்.டி., நுரையீரல் நிபுணர்) மற்றும் டாக்டர் ஏ. சுவாதி பிரியா (எம்.டி.எஸ் .இம்பிளான்ட் மற்றும் ஈரு சிகிச்சை நிபுணர்) ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மருத்துவர் சிவபாலன், மருத்துவர் தங்கராஜ் பொதுமக்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.விழாவில் சிறப்பு விருந்தி னர்களாக தாராபுரம் பத்திரிக்கையாளர் நலச்சங்க தலைவர் காஜாமைதீன், செயலாளர் சாம்ராட் முரளி துணைத் தலைவர் தங்கவேல், பொருளாளர் முனியப்பன், செயல் தலைவர் ரங்கநாதர் பாண்டியன். செய்தி தொடர்பாளர். கிருபாகரன், உதவி செய்தி தொடர்பாளர் கவியரசு உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு புதிய மருத்துவ மையத்தின் வளர்ச்சிக்காக வாழ்த்துகளை தெரிவித்தனர்.பல் சிகிச்சை மற்றும் நவீன இம்பிளாண்ட் வசதிகளுடன் செயல்பட உள்ள இந்த மருத்துவ மையம், தாராபுரம் மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்கும் என நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# காவேரிப்பட்டினத்தில் ரூ.29 லட்சம் மதிப்பிலான சிமெண்ட் சாலைப் பணிகள் ஆய்வுபேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு



கிருஷ்ணகிரி, ஜூன்.12-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சிக்குட்பட்ட பன்னீர்செல்வம் தெருவில், Turrif Fund 2025 26 நிதியின் கீழ் ரூ.29 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, நடைபெற்று வரும் பணிகளின் தரம், முன்னேற்றம் மற்றும் பணிகள் திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த இச்சாலைப் பணிகள் நிறைவடைந்தால், அப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதி மேம்பட்டு, மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்கள் குறையும் என தெரிவித்தார்.இந்த ஆய்வில் மாவட்ட திமுக அமைப்பு சாரா தொழிலாளர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, பேரூராட்சி கவுன்சிலர் சோபன்பாபு, தலைமை எழுத்தர் வெங்கடாசலம், கிளைக் கழக செயலாளர்கள் சமரசம், பாஸ்கர், சிற்றரசன், நியமன உறுப்பினர் பசவராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் சபரி, முருகன், ஒப்பந்ததாரர் ஹரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி மாதாந்திரக் கூட்டம்

மாதவரம், ஜூன்.12-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் தேர்வுநிலை பேரூராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் பேரூராட்சித் தலைவர் தமிழரசிகுமார் தலைமையில் பேரூராட்சி கட்டிடம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.பேரூராட்சி துணைத் தலைவர் விப்ரநாராயணன், இளநிலை உதவியாளர் பங்கஜம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் செங்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு பணிகள் நடைபெறுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்து ஒத்துழைப்பு தந்த தமிழ்நாடு முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும், தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் ஜோசப்விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு தலைவர், துணைத்தலைவர், பேரூராட்சி கவுன்சிலர்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.மேலும்சாலை பணிகள், குடிநீர்வசதி உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.இதில் பேரூராட்சி கவுன்சிலர்கள் லதாகணேசன், கார்த்திக்கோட்டீஸ்வரன், தெய்வானை கபிலன், லீலாவதிச ாந்தகுமார், ரமேஷ், வினோதினிபாலாஜி, கோமதிபா ஸ்கர், ஸ்ரீதேவிதேவராஜ், மோகன், ராதாகிருஷ்ணன், இளங்கோவன், கோதண்டராமன் உள்ளிட்ட பேரூராட்சி பணியாளர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




# தேனி மாவட்டத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ரோந்து பயன்பாட்டிற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனுப்பி வைப்பு

தேனி, ஜூன்.12-

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய். தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து தேனி மாவட்டத்தில் சிங்கப்பெண் இரு அணிகளாக பெண் சார்பு ஆய்வாளர் தலைமையில், பெண் காவலர்கள் சுழற்சி முறையில் ரோந்து வாகனத்தை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ரோந்து பயன்பாட்டிற்கு அனுப்பி வைத்தார். இதன் முக்கிய நோக்கம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்து, குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து, பொது இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள இடம் இடங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகளவில் செல்லக்கூடிய மற்றும் நெருக்கடி மிகுந்த பகுதிகளில் காவல் துறையின் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை ரோந்தை உறுதிப்படுத்தி சட்ட விரோத செயல்களை தடுத்தல் போன்ற மேற்கொள்வார்கள்.

# 2026ம் நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.82 லட்சம் கோடியை எட்டி சாதனை

சண்டிகர், ஜூன்.12-

ஏற்றுமதியாளர்கள், தொழில்துறை அமைப்புகள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளின் மாநாடு சண்டிகரில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் நிதின் குமார் யாதவ் ஆற்றிய உரையில் கூறியதாவது:



201415 நிதியாண்டில் 468 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, 2025 26 நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவாக 863 பில்லியன் டாலராக (ரூ.82 லட்சம் கோடி) உயர்ந்துள்ளது. ஏற்றுமதி ஆண்டுக்கு 5.7% கூட்டு வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், சரக்கு ஏற்றுமதி 310 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 442 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. சேவை ஏற்றுமதி 158 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து ஆண்டுக்கு 9.3% கூட்டு வளர்ச்சி விகிதத்தில் 421 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

மேலும், பெட்ரோலியம் அல்லாத பொருட்களின் ஏற்றுமதி 387.9 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற புதிய சாதனையை எட்டியுள்ளது. இது இந்திய ஏற்றுமதியின் பன்முகத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

100 பில்லியன் டாலர் நேரடி அந்நிய முதலீட்டு வாக்குறுதியுடன் கூடிய இந்தியா ஐரோப்பா இடையிலான தடையற்ற வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தம், இந்தியாவின் 98% ஏற்றுமதிக்கு வரி இல்லா அனுமதியை வழங்குகிறது.

அதிக வருவாய் ஈட்டும் 27 பொருளாதாரங்களை உள்ளடக்கிய இந்தியாஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (2026), 99% இருதரப்பு வர்த்தகத்திற்கு வரி சலுகைகளுடன் ரூ.3.2 லட்சம் கோடி மதிப்பிலான இந்திய ஏற்றுமதிக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மதக்கொண்டப்பள்ளி ஊராட்சி, பின்னமங்கலம் கிராமத்தில், பயனாளி திரு.லட்சுமிநாராயணா த/பெ.சம்பங்கிராமையா தனது விவசாய நிலத்தில் ப்ளூபெர்ரி, ஆப்பிள், அத்தி, அவகேடோ ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா யாதவ், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் குணவதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மீன் வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க அழைப்பு: தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு ரூ.22,000 மதிப்பிலான மானிய உதவி

கிருஷ்ணகிரி, ஜூன்.12-

மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் மற்றும் மூன்று நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியில் பங்கேற்க தகுதியான பட்டியலின மீன்வள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம் அறிவித்துள்ளது.இதுகுறித்து உதவி பேராசிரியர் சோமுசுந்தரலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம் மூலம், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் மற்றும் லக்னோ தேசிய மீன்வள மரபணு பேணகத்தின் நிதி உதவியுடன், 2026ரூ 27 ஆம் ஆண்டில் பட்டியலின மக்களுக்கான சிறப்பு உட்கூறு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.இத்திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 25 பட்டியலின மீன்வள விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு பயனாளிக்கும் 2,000 தரமான மீன் குஞ்சுகள், மீன் தீவனம் வாங்க ரூ.10,000 மற்றும் மீன் வலை, பறவைத் தடுப்பு வலை உள்ளிட்ட உபகரணங்கள் வாங்க ரூ.5,000 என மொத்தம் ரூ.22,000 மதிப்பிலான உதவிகள் மானிய அடிப்படையில் வழங்கப்படும்.மேலும், நவீன மற்றும் அறிவியல் அடிப்படையிலான மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு நாள் விழிப்புணர்வு முகாம் மற்றும் மூன்று நாள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் இலவசமாக நடத்தப்பட உள்ளன. இதன் மூலம் மீன்வள விவசாயிகள் உற்பத்தி திறனை அதிகரித்து குடும்ப வருமானத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த தகுதியான பட்டியலின மீன்வள விவசாயிகள், தேவையான ஆவணங்களுடன் தங்களது விண்ணப்பங்களை பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மைய அலுவலகத்தில் வரும் 30ம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.மேலும் விவரங்களுக்கு 86758 58384 மற்றும் 90920 86570 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்வேறு சிகிச்சை பிரிவுகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு, நோயாளிகளுக்கு தரமான சிகிச்சைகள் வழங்க மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்திறனார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா யாதவ், வட்டார மருத்துவ அலுவலர் மரு.சச்சரிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மாங்கனி கண்காட்சியை புறக்கணிக்க விவசாயிகள் எச்சரிக்கை: 'மா' கிலோவுக்கு ரூ.4 இழப்பீடு வழங்க கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஜூன்.12-

சந்தை மதிப்பு இழப்பு திட்டத்தின் கீழ் தமிழக அரசு 'மா' கிலோவுக்கு ரூ.4 வழங்காவிட்டால், இந்த ஆண்டு நடைபெற உள்ள மாங்கனி கண்காட்சியை புறக்கணிக்க விவசாயிகள் முடிவு செய்துள்ளதாக கிருஷ்ணகிரி மாவட்ட 'மா' விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு 'மா' நல்ல மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடும் வெயில் மற்றும் கடந்த நான்கு மாதங்களாக போதிய மழையின்மை காரணமாக மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இதனால் ஒன்றரை லட்சம் மெட்ரிக் டன் விளைச்சலை எட்டுவது கேள்விக்குறியாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.மேலும், கடந்த ஆண்டு ஏற்பட்ட நஷ்டத்திற்காக 'மா' விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க மாவட்ட ஆட்சியர் தமிழக அரசுக்கு பரிந்துரைத்ததையும், அப்போதைய அமைச்சர் ரூ.90 கோடி நிதி வழங்கப்படும் என அறிவித்ததையும் நினைவுபடுத்திய அவர், இதுவரை எந்த நிதியும் வழங்கப்படவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாங்கூழ் தொழிற்சாலைகள் விவசாயிகளுக்கு உரிய விலை வழங்காமல் தொடர்ந்து ஏமாற்றி வருவதாகவும், ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரும் மாங்காய்க்கு உரிய விலை நிர்ணயம் செய்யப்படாதது வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மாங்காய் கிலோவுக்கு ரூ.15 வழங்க வேண்டும் என்ற மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.எனவே, தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு 'மா' விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும், சந்தை மதிப்பு இழப்பு திட்டத்தின் கீழ் 'மா' கிலோவுக்கு ரூ.4 வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இல்லையெனில், இந்த ஆண்டு நடைபெற உள்ள மாங்கனி கண்காட்சியை புறக்கணிக்க மாவட்ட 'மா' விவசாயிகள் முடிவு செய்துள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.



■ சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரம்பட்டியில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாளை முன்னிட்டு,அவரது திருவுருவச் சிலைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அஇஅதிமுக) சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்நிகழ்வில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அஇஅதிமுக சிவகங்கை மாவட்ட செயலாளருமான பி.ஆர். செந்தில்நாதன் தலைமையில் வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.இதில் அஇஅதிமுக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தையும், நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க பணிகளையும் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினர்.



■ மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சீ.ரமேஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் இணை ஆணையர்கள் சுரேஷ், மாரியப்பன், உதவி ஆணையர் முத்துராமன் மற்றும் திருக்கோயில் அலுவலர்கள் உள்ளனர்.

# ஆகாஷ் மரண வழக்கு சி.பி.சி.ஐ.டி விசாரணையை விரைந்து முடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஜூன்.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல் நிலைய விசாரணையின்போது உயிரிழந்த ஆகாஷ் டெலிசன் மரண வழக்கில், சி.பி.சி.ஐ.டி விசாரணையை விரைந்து முடித்து உரிய நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. மானாமதுரையைச் சேர்ந்த ராஜேஷ் கண்ணன் தாக்கல் செய்த மனுவில், தனது மகன் ஆகாஷ் டெலிசன் (26) மற்றும் அவரது நண்பர் குணா ஆகியோர் கடந்த மார்ச் 6ஆம் தேதி மது அருந்தியபோது ஏற்பட்ட தகராறில் தொடர்புடையவர்களாகக் கூறப்பட்டனர். இந்த மோதலில் அழகர் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மானாமதுரை காவல்துறையினர் நடத்திய விசாரணையின்போது ஆகாஷ் டெலிசன் தாக்கப்பட்டதாகவும், அதனால் அவரது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர், மார்ச் 8ஆம் தேதி உயிரிழந்தார்.இந்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், வழக்கை சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு மாற்றவும் மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.வழக்கு விசாரணையின்போது அரசுத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஆகாஷ் டெலிசனை கைது செய்ய காவல்துறையினர் முயன்றபோது அவர் பாலத்தில் இருந்து கீழே விழுந்ததால் காயமடைந்ததாக விளக்கம் அளித்தார். அதே நேரத்தில், இந்த வழக்கு தற்போது சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு மாற்றப்பட்டு, கொலை மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.மனுவை விசாரித்த நீதிபதி எல். விக்டோரியா கௌரி, கடந்த மார்ச் 7ஆம் தேதி ஆகாஷ் டெலிசனை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பியபோது மானாமதுரை நீதித்துறை நடுவர் அப்சல் பாத்திமா அவரது காலில் இருந்த கடுமையான காயங்களைக் கவனித்ததாகவும், காவல்துறை சித்திரவதை குறித்த புகாரை வாக்குமூலமாக பதிவு செய்திருந்ததாகவும் குறிப்பிட்டார். இந்த வாக்குமூலம் வழக்கின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக உள்ளதாகவும் நீதிபதி தெரிவித்தார்.மேலும், டி.எஸ்.பி அந்தஸ்திலான அதிகாரி ஒருவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், காவல் நிலைய சி.சி.டி.வி காட்சிகள் மற்றும் மருத்துவமனை ஆவணங்கள் உள்ளிட்ட முக்கிய ஆதாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. முதற்கட்ட பிரேதப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதித்துறை நடுவரின் அறிக்கையின் அடிப்படையில், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தீவிர விசாரணை நடைபெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டது.வழக்கை விசாரித்த நீதிபதி, "காவல் நிலையங்களுக்குள் ஒருவரின் அடிப்படை வாழ்வுரிமை பறிக்கப்படக் கூடாது. காவல்துறை சித்திரவதைகள் சட்டத்திற்கு எதிரானவை" எனக் கடுமையாகக் குறிப்பிட்டார்.மேலும், சி.பி.சி.ஐ.டி விசாரணை அதிகாரி எந்தவித அழுத்தமும் இன்றி சுதந்திரமாகவும் நேர்மையாகவும் விசாரணையை மேற்கொண்டு, விரைவில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை முடித்து வைத்தார்.





# திரிணமூல் எம்.பி. பிரகாஷ் சிக் பரைக் விலகல்: ஒரே வாரத்தில் 3 உறுப்பினர்கள் ராஜினாமா

புது டெல்லி, ஜூன்.12-

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் பிரகாஷ் சிக் பரைக், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்த ஒரு வாரத்திற்குள் திரிணமூல் காங்கிரஸில் இருந்து ராஜினாமா செய்யும் மூன்றாவது மாநிலங்களவை உறுப்பினர் இவராவார். மாநிலங்களவை தலைவரும், குடியரசு துணைத் தலைவருமான சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பிரகாஷ் சிக் பரைக் அனுப்பிய ராஜினாமா கடிதத்தில், 'நான் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்கிறேன்; இதனை உடனடியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாநிலங்களவை உறுப்பினராக எனது பதவிக்காலத்தில் அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கிய தங்களுக்கும், துணைத் தலைவருக்கும் மற்றும் மாநிலங்களவை செயலகத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த பின்னர் பேசிய பிரகாஷ் சிக் பரைக், "மேற்கு வங்க மக்களின் கருத்தை ஏற்று, நானும் இன்று எனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளேன்" என்றார். பாஜகவில் இணையப் போகிறீர்களா என்று கேள்விக்கு, "காலம்தான் பதில் சொல்லும்" என்று அவர் கூறினார்.சமீபத்தில் நடந்துமுடிந்த மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்றது. 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திரிணமூல் காங்கிரஸ் கட்சி 80 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது. தேர்தல் தோல்வி ஒருபுறம் அழுத்த, மம்தா பானர்ஜிக்கு எதிராக ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் 61 எம்எல்ஏக்கள் மேற்கு வங்க சட்டப்பேரவையில் செயல்பட்டு வருகின்றனர். அதிக உறுப்பினர்கள் ஆதரவு உள்ளதால் ரிதப்ரதா பானர்ஜி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக தேர்வானார்.மம்தாவின் நம்பிக்கைக்குரியவரான சுகேந்து சேகர் ராய் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து சமீபத்தில் விலகினார். அதன்பின்னர் சுஷ்மிதா தேவ் மாநிலங்களவை எம்.பி பதவியிலிருந்து நேற்று விலகி திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ச்சி கொடுத்தார். இந்தச் சூழலில் மூன்றாவது நபராக பிரகாஷ் சிக் பரைக் இன்று தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**ஓ. மு. அ 3/1002/2025-6**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், 375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த / பெ. கருப்பன் என்பவரின் ஐயா ஆறுமுகம் என்பவர் கடந்த 1955 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிட ப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது..

மனுதாரர்
திரு.ஆறுமுகம்
375, அதப்படக்கி கிராமம் காளையார் கோவில் வட்டம் சிவகங்கை மாவட்டம்
எதிர்மனு
1. வட்டாட்சியர்
காளையார் கோவில்

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**ஓ. மு. அ 3/1002/2025-7**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், 375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த / பெ. கருப்பன் என்பவரின் பெரியப்பா ராக்கான என்பவர் கடந்த 1972 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்து ப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திரு.ஆறுமுகம்
375, அதப்படக்கி கிராமம் காளையார் கோவில் வட்டம் சிவகங்கை மாவட்டம்
எதிர்மனு
1. வட்டாட்சியர்
காளையார் கோவில்

# பனை விவசாயியை காவலர் சுட்ட வழக்கு: சிபிசிஐடி விசாரணைக்கு ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன்.12-

பனை விவசாயியை காவலர் துப்பாக்கியால் சுட்ட வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அடுத்த மருதம் பூத்தூரைச் சேர்ந்த பெருமாள் சேட், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "எனது மகன் மணிகண்டன், பதநீர் இறக்கும் தொழில் செய்து வருகிறார். கடந்த ஏப்.7ல் ஆலங்குளம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா மற்றும் சில போலீஸார் சீருடை அணியாமல் எங்கள் வீட்டிற்கு வந்து மணிகண்டனை உடன் அழைத்துச் சென்று, பனை மரத்தில் கட்டப்பட்டுள்ள பானைகளில் கள் உள்ளதா அல்லது பதநீர் உள்ளதா எனப் பார்க்க கூறியுள்ளனர். மணிகண்டன் மரம் ஏறும் போது சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா சாதிப் பெயரைச் சொல்லி திட்டினார். இதனை அங்க நின்றிருந்த நான் மற்றும் எனது பேத்தி ஆகியோர் தட்டிக்கேட்டோம். எங்களை போலீஸார் மிரட்டினர். மணிகண்டன் மரத்தில் இறங்கி வந்த போது அவரை சார்பு ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டார். இதில் மணிகண்டனின் இரு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். உள்ளூர் போலீஸார் விசாரித்தால் எங்களுக்கு நியாயம் கிடைக்காது. எனவே என் மகன் போலீஸாரால் சுடப்பட்ட வழக்கு விசாரணையை சிபிஐ அல்லது வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றவும், அதுவரை விசாரணைக்கு தடை விதித்தும் உத்தரவிட வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி புகழேந்தி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் கோரிக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விவசாயி மீது துப்பாக்கியால் சுட்ட வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார்.



# மேகாலயா அமைச்சர், அதிகாரிகள் 6 மாதம் வெளிநாடு செல்ல தடை

ஷில்லாங், ஜூன்.12-

மேகாலயா மாநில அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் அடுத்த 6 மாதங்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மேகாலயா மாநில அரசு நேற்று அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.மாநில அரசின் செலவுகளை குறைக்கும் பொருட்டு அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் அடுத்த 6 மாதங்களுக்கு வெளிநாடு செல்லக்கூடாது. புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் அந்நியச் செலாவணி வளங்கள் மீதான அழுத்தம் உள்ளிட்ட உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற சூழலில், பொது நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் மாநில அரசு அதிகாரிகள் ( நிரந்தர அல்லது ஒப்பந்தப் பணியாளர்கள் ) மேற்கொள்ளும் அனைத்து அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணங்களையும் ஆறு மாதங்களுக்கு நிறுத்திவைக்குமாறு ஆளுநர் தரப்பில் உத்தரவு வந்துள்ளது. பொது நலன் கருதியும், சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கும் நோக்கத்துடனும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.இந்த அறிவிக்கையின் விளைவாக, பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 68 அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கவிருந்த 8 வெளிநாட்டுப் பயிற்சிப் பயணங்கள், அனுபவப் பரிமாற்றத் திட்டங்களுக்கான பயணங்கள் ஆகியவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.




# சரக்கு லாரி வாடகை 25 சதவீதம் உயர்கிறது

நாமக்கல், ஜூன்.12-

டீசல் விலை உயர்வு காரணமாக லாரி வாடகைக் கட்டணம் 25 சதவீதம் உயர்த்த மாநில லாரி உரிமையாளர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது. நாமக்கல்லில் இந்த சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் நடந்தது. இதில், 'மே 15 முதல் டீசல் விலை உயர்ந்துள்ளது. இதனால், லாரி உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்க லாரி வாடகை கட்டணம் தற்போதைய கட்டணத்தில் இருந்து 25 சதவீதம் உயர்த்தப்படுகிறது.ஜிபிஎஸ் கருவி பொருத்த வேண்டும் என்ற முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும். அதிக பாரம் ஏற்றும் லாரிகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.








Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161